# பால் உற்பத்தியில் சரித்திர சாதனை... முதல் பக்கத் தொடர்ச்சி

● அச்சரப்பாக்கம் (காஞ்சிபுரம் திருவள்ளூர்), கடலூர், தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் கரூர் ஆகிய ஒன்றியங்களில் பால் பண்ணைகள் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகிறது.

● நாமக்கல் ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் கையாளும் திறன் கொண்ட பால் பதப்படுத்தும் பண்ணை நிறுவும் பணிகள் 89 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

● மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 50 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் வழங்கப் பணிகள் தொடங்கப்பெற்று நடைபெற்று வருகின்றன.

**புதியதாக 342 பாலகங்கள்!**

● ஆவின் பால் பொருள்கள் விற்பனையை அதிகரித்திட ஏதுவாக புதிதாக 342 பாலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

● நுகர்வோர்களுக்கு ஐஸ்கிரீம் விற்பனை செய்யும் பொருட்டு சேலத்தில் நாளொன்றுக்கு 6000 லிட்டர் உற்பத்தி திறன் உள்ள புதிய ஐஸ் கிரீம் தொழிற்சாலை திறக்கப்பட்டது.

● மாதவரம் பால் பண்ணையில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் மத்திய தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் துவங்கப்பட்டுள்ளது.

● கள்ளக்குறிச்சி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் துவங்கப்பட்டுள்ளன.

● சேலம் மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஏற்கனவே உள்ள பால் பண்ணையின் பால் கையாளும் திறனை 7 லட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யவும் மற்றும் 30 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கவும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

● தூத்துக்குடி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய புதிய பால் பண்ணை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

● பெருகிவரும் மக்கள் தேவையினைக் கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்களால் 14.11.2023 அன்று, மூலப்பொருள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட கால்நடை தீவனத்தினைச் சேமித்து வைப்பதற்காக ரூ.214 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் செலவில் 1500 மெட்ரிக் டன் கூடுதலாக சேமிப்புக் கிடங்கு கட்டடம், திருநெல்வேலி மாவட்ட ஒன்றியத்தில் மகளிர் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மகளிருக்கு எனத் தனியே நூலக வசதியுடன், விடுதி மற்றும் ஆய்வக வசதியுடன் பயிற்சி நிலையம் ரூ.121 இலட்சம் மதிப்பீட்டில், தர்மபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் NABARD நிதியுதவியுடன் ரூ.272 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அலுவலகம் மற்றும் பால் கொள்முதல் பிரிவு கட்டடம், ரூ.293 இலட்சத்தில் திருவண்ணாமலை பால் பவுடர் ஆலையில் இணைய நிதி மூலம் 1500 மெட்ரிக் டன் பால் பவுடர் சேமிப்பு கிடங்கு மற்றும் திருப்பூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் NABARD நிதியுதவியுடன் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியாளர்கள் நலன்!**

● பால் உற்பத்தியாளர்களுக்கு தாமதமில்லாமல் பால் பண பட்டுவாடா நேரடியாக அவர்களது வங்கி கணக்கிற்கே செலுத்தப்பட்டு வருகிறது.

● 2022-23ம் ஆண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு ரூ.27.60 இலட்சமும் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு ரூ. 12.58 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 202324ம் ஆண்டு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பணியாளர்களுக்கு ரூ.25.85 இலட்சமும் மற்றும் இணையத்தின் பணியாளர்களுக்கு ரூ.11.61 இலட்சமும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

● 2022-23 ஆம் ஆண்டில் 1.39 இலட்சம் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.1,951.74/ இலட்சம் போனஸ் ஆகவும் ரூ.3432.62 இலட்சம் பங்கு ஈவுத்தொகையாகவும் ரூ.38.63 இலட்சம் ஆதரவு தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது.

● கிராம அளவில் எருமை கன்று வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் எருமை கன்று வளர்ப்பு திட்டத்தின் கீழ் 2000 எருமை கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு பருவ ஒருங்கிணைப்பு மற்றும் பாலின விந்து கருவூட்டல் மூலம் 820 இலட்சத்தில் 12 ஒன்றியங்களில் நடைபெற்று வருகிறது.

● பால் உற்பத்தியாளர்களின் 5 இலட்சம் கறவை மாடுகளுக்கு 85% மானியத்தில் கால்நடை காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

● கறவைகளின் சினை பிடிக்கும் திறனை அதிகரிக்க 5000 கறவைகளுக்கு சினைதருண ஒருங்கிணைத்தல் திட்டம் 2022-23ம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

**ஆவின் நிறுவனத்தின் செயல்பாடுகள்!**

● ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டர் அதிகரிப்பு

● ஆவின் பால் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ரூபாய் 3/ குறைப்பினால் ஆவின் பால் நுகர்வோர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 270 கோடி சேமிப்பு.

● தமிழ்நாடு அரசின் 2022 ஆம் ஆண்டிற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பில் 121 கோடி ரூபாய் மதிப்புள்ள 2 கோடியே 16 இலட்சம் எண்ணிக்கையில் 100 மி.லி. ஆவின் நெய் விநியோகம்.

● மில்க் கேக், மாம்பழம் & ஸ்ட்ராபெரி சுவைகளில் யோகர்ட், பாயாசம் மிக்ஸ், பால்புரத நூடுல்ஸ் மற்றும் டெய்ரி ஒயிட்னர் ஆகிய புதிய பால் பொருட்கள் 19.1.2022 தேதியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

● நுகர்வோர்களின் ஐஸ்கிரீம் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மதுரையில் நாளொன்றுக்கு ஆயிரம் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட ஐஸ்கிரீம் தொழிற்சாலை முதலமைச்சர் அவர்களால் 14.3.2022 அன்று காணொலி காட்சி மூலம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

● பலாப்பழ ஐஸ்கீரிம், ஒயிட் சாக்லெட், கோல்டு காபி, பட்டர் சிப்லெட்ஸ், பாசுந்தி, ஆவின் ஹெல்த் மிக்ஸ், பதப்படுத்தப்பட்ட சீஸ், பேக்டு யோகர்ட், ஆவின் மில்க் பிஸ்கட் மற்றும் ஆவின் பட்டர் முறுக்கு ஆகிய பத்து புதிய பால் பொருள்கள் 19.8.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

● 2022 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆவின் இனிப்பு வகைகள் 116.00 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து சாதனை நிழ்த்தப்பட்டது.

● ஆவின் நிறுவனம் சென்னை மாநகரில் அதிகபட்சமாக நாளொன்றுக்கு 15.22 இலட்சம் லிட்டர் விற்பனை செய்துள்ளது. மேலும், மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களில் அதிகபட்சமாக 16.37 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்தும் சாதனை படைத்துள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு அதிகபட்சமாக 31.37 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

● 2021 ஆம் ஆண்டு பால் விற்பனையை ஒப்பிடும்போது தற்போது 2024 ஆம் ஆண்டு ஏறத்தாழ 23% அதிகரித்துள்ளது.

**புதிய வடிவிலான பால் பாக்கெட்டுகள்!**

● தமிழ்நாடெங்கும் உள்ள வாடிக்கையாளர்கள் ஆவின் பாலை ஒரே மாதிரியாக வாங்கிப் பயன்படுத்தும் வகையில் புதிய வடிவமைப்பிலான பால் பாக்கெட்டுகள் இணையம் மற்றும் ஒன்றியங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

● மாற்றியமைக்கப்பட்ட பேக்கிங் முறையில் பால் பொருள்களைச் சிப்பம் கட்டுதல் மற்றும் அவற்றின் தரத்தினைத் தொடர்ந்து கண்காணிப்பதனால் இனிப்பு வகைகளின் ஆயுட்காலம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

● பொதுமக்கள் தங்கள் இல்லங்களிலிருந்தே இணையதளம் வாயிலாக ஆவின் பால் அட்டையை விண்ணப்பிக்கவும் மற்றும் புதுப்பிக்கும் நடைமுறைகள் எளிதாக்கப்பட்டது. இந்த எளிய நடைமுறை மூலம் சுமார் 58650 பால் அட்டை விண்ணப்பங்கள் கடந்த மூன்று மாதங்களில் புதிப்பிக்கப்பட்டுள்ளன.

● தமிழ்நாடு முழுவதும் அனைத்து சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் இதர விற்பனை நிலையங்களிலும் ஆவின் ஐஸ்கிரீம் விற்பனையை துவக்கிடவும் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனையை உயர்த்திடவும் பிரத்தியோக ஐஸ்கிரீம் மொத்த விற்பனையாளர்கள் நியமித்து விற்பனை துவங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஐஸ்கிரீம் விநியோகத்தை தமிழ்நாடு முழுவதும் எளிதாக கொண்டு சேர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

● கோடைக்காலத்தை முன்னிட்டு ஆவின் நிறுவனம் ஐஸ் கிரீம், தயிர், மோர், லஸ்ஸி போன்ற பொருட்களை விற்பனை செய்வதற்கு பல்வேறு ஏற்பாடுகள் செய்யதுள்ளது. சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும், பொதுமக்கள் அதிகம் கூடும் கடற்கரை, வழிபாட்டுத் தலங்கள், சுற்றுலா தலங்கள் போன்ற அனைத்து இடங்களிலும் ஆவின் ஐஸ் கிரீம் கிடைப்பதை உறுதி செய்ய 33 பேட்டரி வண்டிகள் மூலம் ஐஸ் கிரீம் விற்பனை செய்யப்பட்டுள்ளது .

● சென்னை தீவு திடலில் நடைபெற்ற 48வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் ஆவின் நிறுவனத்தின் சார்பாக கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு ஆவின் நிறுவனத்தின் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி நிலைகள் கண்காட்சி அரங்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

● வளர்ந்து வரும், மின்னணு மற்றும் இணையவழி வணிகத்தில் ஆவின் நிறுவனம் தனது சந்தை மதிப்பை அதிகரிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. தற்போது ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனையை மின் வணிக முறையில் பிக் பாஸ்கெட் (BIG BASKET), ஸ்விக்கி (SWIGGY), ஸோமாட்டோ (ZOMATO) ரிலையன்ஸ் (RELIANCE), ஜியோமார்ட் (JIOMART) பிலிங்க்கிட் (BLINKIT) மற்றும் ஸிப்டோ (ZEPTO) மூலம் சந்தைப்படுத்தியுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் மின்னணு மற்றும் இணையவழி வணிகம் மூலம் சுமார் 30.19 கோடி ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**பணியாளர் நலன்**

தமிழ்நாட்டு மக்களின் பால் தேவையினைப் பூர்த்தி செய்வதில் முதன்மையாகவும் முன்னணி நிறுவனமாகவும் செயல்படும் ஆவின் நிறுவனத்தில் மாநிலம் முழுவதும் பணியாளர்கள் அர்ப்பணிப்போடு பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து அவைகள் நிறைவேற்றப்பட்டும் வருகிறது. ஆவின் நிறுவனத்தில் 58 பேருக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**விருதுகள்**

இந்திய தேசிய கூட்டுறவு பால் பண்ணைகளின் இணையம் (NCDFI) மூலம் 2021-22 ஆம் ஆண்டு ஆவின் நிறுவனத்தின் பால் மற்றும் பால் பொருள்களை மின்னணு வாயிலாக ரூ.590/கோடிக்கு பரிவர்த்தனை மேற்கொண்டதற்காக ஆவின் நிறுவனத்திற்கு இந்திய அளவில் இரண்டாமிடத்திற்கான விருது வழங்கப்பட்டுப் பாராட்டப்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆவின் நிறுவனத்தின் சார்பில், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம் ஆகிய மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் பயன்பெறும் வகையில் சேலம் பால் பண்ணை வளாகத்தில் அதிநவீன தொழில்நுட்பத்தில் நிறுவப்பட்டுள்ள ஐஸ்கிரீம் தொழிற்சாலையைத் திறந்து வைத்தல்.

---

## இதுவரை ரூ.6 கோடியே ஒரு இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 6 கோடியே ஒரு லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/– (இரண்டு லட்சம்) 17–06–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | கே.சாரங்கன், பெரியார் நகர், இரும்புலியூர், தாம்பரம், சென்னை – 45 | 25,000/– |
| 2. | ஏ.நஜ்மாபேகம், உப்புநூத்து தெரு, அல்லி நகரம், தேனி மாவட்டம் | 25,000/– |
| 3. | பி.சின்னக்காளை, விளாம்பட்டி, சாத்தாம்பாடி, நத்தம், திண்டுக்கல் மாவட்டம் | 25,000/– |
| 4. | கவிஞர் ஆ.முனியராஜ், தொருவளூர் குடியிருப்பு – அஞ்சல், இராமநாதபுரம் | 25,000/– |
| 5. | ஆர். நடராஜன், குருந்தங்குளம், திருப்பாச்சேத்தி, திருப்புவனம், சிவகங்கை | 25,000/– |
| 6. | எஸ்.லட்சுமணன்,வார்டு பிரதிநிதி, புளியம்பட்டி, அருப்புக்கோட்டை, விருதுநகர் | 25,000/– |
| 7. | சி.முருகேசன், ஒன்றிய பிரதிநிதி, நாட்டார்பட்டி, திப்பணம்பட்டி, தென்காசி | 25,000/– |
| 8. | திருமதி க.பாப்பா, கொட்டங்காடு, உடன்குடி, திருச்செந்தூர், தூத்துக்குடி | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

---

## தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம்

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஆய்வு செய்ய வேண்டும்!

## பி.வில்சன் எம்.பி. வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஜூன் 18-*

தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஆய்வு நடத்தி, அது தொடர்பான அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என, தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் வலியுறுத்தியுள்ளார்.



தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

இந்தியா போன்ற உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஹேக் செய்ய முடியாது என்று தேர்தல் ஆணையம் கூறுவதை ஏற்க முடியாது என்று டெஸ்லா நிறுவனத்தின் தலைவர் எலான் மஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

வாக்குச்சீட்டு முறையை ஒழித்த பிறகு, தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

பணியாளர்களைக் குறைக்கவும், வேலை நேரத்தை குறைக்கவும், தேர்தல் முடிவுகளை விரைவாக அறிவிக்கும் வகையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன, ஆனால் மின்னணு இயந்திரங்களை ஹேக் செய்ய முடியும் என பல்வேறு ஆய்வு முடிவுகள் தெரிவித்துள்ளன.

பல்வேறு நாடுகள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை நம்பாத நிலையில், இந்திய தேர்தல் ஆணையம் மட்டும் வாக்குப்பதிவு இயந்திரங்களை இன்னும் தாங்கி பிடித்துள்ளது. அனைத்துக் கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற குழு முன்னிலையில் தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பற்றிய அறிவியல் ஆய்வு நடத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுதொடர்பான வெள்ளை அறிக்கையை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சமர்ப்பித்து அதன் மீது விவாதம் நடத்தி நாட்டு மக்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மீதான அச்சத்தை களைய வேண்டும்.

இவ்வாறு பி.வில்சன் தனது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



“நான் முதல்வன்” திட்டத்தின் கீழ் இங்கிலாந்து நாட்டில் பயிற்சி முடித்து நேற்று (17.06.2024) சென்னை, விமான நிலையத்திற்கு வருகை புரிந்த 25 மாணவர்கள்.